
# திராவிடத்தால் வாழ்கிறோம்

970

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

தமிழ்.கா.அமுதரசன்

23

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுப் பூர்வமாக விவரிக்கும் தொடர்!

அரசாணை (எண்: 355) வெளியிட்டார். அதில், மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் 1-ஆம் வகுப்பு முதல் 5-ஆம் வகுப்பு வரை தமிழ் அல்லது தாய்மொழி பயிற்றுமொழியாக இருக்கும். 6-ஆம் வகுப்பு முதல் தமிழ், தாய்மொழி அல்லது ஆங்கிலம் பயிற்றுமொழியாக இருக்கும். இப்படி அடுத்தடுத்த அறிவிப்புகளை வெளியிட்டார்.

அரசின் இந்த அறிவிப்புகளுக்கு எதிராகவும், சிலர் நீதிமன்றப் படியேறினர். குறிப்பாக, 19.11.1999 அன்று பிறப்பித்த அரசாணை எண்: 324-ஐ எதிர்த்தும் உயர் நீதிமன்றத்தில்

ஆண்டிலிருந்து 12-ஆம் வகுப்பு வரை அனைவருக்கும் அறிவியல் தமிழ்" என்கிற அதிரடி அறிவிப்பை வெளியிட்டார். ஆனால், அதற்கான முன் முயற்சிகள் எதுவுமே நடைபெறவில்லை.

அந்த ஆண்டு தொடக்கத்தில், 'தமிழை ஆட்சி மொழியாக்குவது குறித்த ஒரு கேள்விக்குப் பதிலளித்த அம்மையார், "மத்திய அரசு தமிழை ஆட்சி மொழியாக்கினால், தமிழ்நாட்டின்

ஓவியம் : ரவி பேலட்



# கட்டாய தமிழ்க்கல்வி சந்தித்த சவால்கள்!

**27.11.1998** அன்று வெளியிடப்பட்ட அரசாணை எண்:421 மற்றும் 13.01.1999 அன்று வெளியிடப்பட்ட அரசாணை எண்: 9 ஆகியவற்றுக்கு எதிராகத் தனியார் பள்ளிகள் கூட்டமைப்பு தொடர்ந்த வழக்கில், அரசின் அரசாணைகளுக்கு எதிராகத் தீர்ப்பு வந்தாலும், முத்தமிழறிஞர் கலைஞர் அந்த விவகாரத்தை அத்துடன் முடிக்கவில்லை.

'பயிற்று மொழியாகத் தமிழைக் கட்டாயமாக்கி தமிழ்நாடு அரசு வெளியிட்ட உத்தரவு தெளிவாக இல்லை; முரண்பாடுகளைக் கொண்டுள்ளது' என சென்னை உயர் நீதிமன்றத்தில் 07.06.1999 அன்று தீர்ப்பு வந்தது. அந்தத் தீர்ப்புக்குப் பின்னர், மீண்டும் அரசின் மொழிக் கொள்கைகள் குறித்து, அடுத்தடுத்து அறிவிப்புகளை வெளியிட்டு, தனது உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார் முத்தமிழறிஞர் கலைஞர்.

குறிப்பாக, நீதிபதி எஸ்.மோகன் குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில், 19.11.1999 அன்று அரசாணை எண்:324ஐ பிறப்பித்தார். அதன்படி, தமிழில் பயிற்றுமொழி குறித்து, நீதிமன்றத் தீர்ப்புக்குப் பின் நிலவிய கருத்துகளை, அந்த அரசாணை தெளிவு படுத்தியது.

### மொழிக்கொள்கை அதிகாரம்

(1) அரசாங்கத்தின் மொழிக் கொள்கைகள் பற்றிய ஆணைகள், தொடர்ந்து அரசாணைகள் மூலமே அறிவிக்கப்படும்.

(2) அனைத்துப் பள்ளிகளிலும் - மெட்ரிகுலேஷன், அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் மற்றும் உதவி பெறாத அங்கீகாரம் பெற்ற பள்ளிகள் ஆகியவற்றில் முதல் மொழியாக தமிழ் அல்லது தாய்மொழி இருக்கும்.

(3) மெட்ரிகுலேஷன் மற்றும் மாநில அரசுப் பள்ளிகளில் பயிற்றுமொழியாகத் தமிழ் அல்லது தாய்மொழி இருக்கும்.

(4) 2000-2001 முதல் மூன்றாண்டுக் காலத்திற்குள் தமிழ் அல்லது தாய்மொழி பயிற்றுமொழி என்பது முடிவடைய வேண்டும்.

அதற்கு அடுத்து, 27.12.1999 அன்று ஓர் மாணவர்கள், பல்வேறு சங்கத்தினர், தனியார் பள்ளிகள் சார்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டன. அந்த வழக்கினை விசாரித்த உயர் நீதிமன்றத்தின் முழு பெஞ்ச், ரிட் மனுக்களை ஏற்றுக்கொண்டு அரசாணையை ரத்து செய்தது.

### ஆட்சிமாற்றம் – அம்மையார் தடாலடி

உயர் நீதிமன்ற முழு அமர்வின் தீர்ப்புக்கு எதிராக தமிழ்நாடு அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது. அது விசாரணையில் இருந்த நிலையில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டு, அம்மையார் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தார்.

தமிழைப் பாடமொழியாகவும், பயிற்று மொழியாகவும் ஆக்குவதற்கான போராட்டம், 1968-ஆம் ஆண்டில் தொடங்கியது. 1989, 1997, 1998, 1999 என தொடர்ச்சியாகப் பல ஆண்டுகளில் கலைஞர் கொண்டுவந்த அரசாணைகள் அனைத்தும் தமிழ்நாட்டின் பல ஆண்டுக்கால கனவு. அவை நீதிமன்றத்தால் கலைக்கப்பட்டன.

மீண்டும் 2006-ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சிக்கு வரும் வரை, 1-ஆம் வகுப்பு முதல் 5-ஆம் வகுப்பு வரை கொண்டுவருவதற்காகச் செய்யப்பட்ட மாற்றங்கள் எல்லாம் செல்லுபடியாகாமல் போய், பழைய பாடத்திட்ட முறையே தொடர்ந்து அமலில் இருந்து வந்தது.

அதேநேரத்தில், 2003-ஆம் ஆண்டு அம்மையார் ஆட்சிக்காலத்தில், சுதந்திர தின உரையில் அதிரடியாக "2003-ஆம்

> "ஆட்சிக்கு வந்தார் கலைஞர். தமிழ்நாடு தமிழ் கற்றல் சட்டம் 2006-ஐக் கொண்டு வந்தார்."

பள்ளிகளில் இந்தியைப் பாடமாக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்று குறிப்பிட்டது அவருக்கு அரசியல்ரீதியாக பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. தமிழ்நாட்டில், மறைமுகமாக இந்தியைத் திணிப்பதற்கு துணைபோகத் தயாராக இருந்தார் அம்மையார்.

கடும் எதிர்ப்புகள் எழுந்தன. ஏதாவது செய்தாகவேண்டிய நெருக்கடியில் இருந்தவர், சட்டமன்றக் கூட்டத்தொடரில் கல்வித்துறை மானியக் கோரிக்கையின்போது, "தமிழகத்தில் தமிழைப் பயிற்று மொழியாக்கும் திட்டத்துக்கு எதிரான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் இருப்பதால், தமிழைக் கட்டாயப் பாடமாக்கும் திட்டத்தை அமல்படுத்த முடியாத நிலை உள்ளது. எனவே, அதற்கு மாற்றாக ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை உள்ள பாடத்திட்டத்தில் அறிவியல் தமிழ் என்ற புதிய பாடப்பிரிவு சேர்க்கப்படுகிறது" என அறிவித்தார்.

சட்டமன்றத்தில் ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமே கட்டாய அறிவியல் தமிழ்ப் பாடத்தை அறிவித்திருந்த அம்மையார், அந்த ஆண்டு சுதந்திர தின உரையில் 12-ஆம் வகுப்பு வரை என அறிவித்து, ஆணை பிறப்பித்துள்ளதாகக் குறிப்பிட்டார். ஆனால், அப்படி ஒரு ஆணை அதுவரை பிறப்பிக்கப்படவே இல்லை. தவிர, அம்மையார் அறிவித்த கட்டாய அறிவியல் தமிழ்ப் பாடம் 5-ஆம் வகுப்புவரைகூட முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

படிப்படியாகச் செய்யப்படும் என்று முதலில் கூறிவந்தவர், அந்த கல்வியாண்டிலிருந்தே 'அறிவியல் தமிழ்' என்று அதிரடி காட்டியதும் நீதிமன்றத்தில் நிற்கவில்லை. அந்த ஐந்து ஆண்டுகளும் கடந்த நிலையில்தான், 2006-ஆம் ஆண்டு தேர்தலை எதிர்கொண்ட கழகம், 'தமிழ்நாட்டுப் பள்ளிகளில் கட்டாயத் தமிழ்க்கல்வி' என்பதை உறுதியான வாக்குறுதியாக முன்வைத்தது. ஆட்சிக்கு வந்தார் கலைஞர். தமிழ்நாடு தமிழ் கற்றல் சட்டம் 2006-ஐக் கொண்டுவந்தார்.

வழக்கம் போலவே தமிழ் கற்பதற்கான சட்டத்தை எதிர்த்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அதைக் கலைஞர் எப்படி எதிர்கொண்டார்?

...தொடரும்

## ஏக்கருக்கு 1 ரூபாய் : அதானிக்கு அதிரடி பரிசு!

பீகார் மாநிலத்துக்கு ரூ.40,000 கோடி மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை, செப்டம்பர் 15-ஆம் தேதி பிரதமர் மோடி தொடங்கிவைத்தார். அதில் ரூ.25,000 கோடி மதிப்பிலான நிலக்கரி வெப்ப மின்நிலையம் அமைப்பதற்கான திட்டமும் ஒன்று. பீகார் மாநிலத்தை மின்னுற்பத்தியில் தன்னிறைவு அடையச் செய்வதற்கான, மிகப்பெரிய தனியார் முதலீட்டுத் திட்டம் இது என்று பிரதமர் கூறினார். எனினும், அது எந்தத் தனியார் நிறுவனம் என்று அப்போது கூறவில்லை.

ஆனால், செப்டம்பர் 13-ஆம் தேதியே, அதானி குழுமத்தின் துணை நிறுவனமான அதானி பவர் மற்றும் பீகார் மாநில மின் உற்பத்தி நிறுவனம் (BSPGCL) இடையே, மின் நிலையம் அமைத்து, 25 ஆண்டுகள் அதனை இயக்கும் உரிமைக்கான ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. ஜூன் மாதத்தில் ஜே.எஸ். டபிள்யூ. எனர்ஜி, டாரண்ட் பவர், பஜாஜ் குழுமத்தின் லலித் பவர் போன்ற நிறுவனங்களும் போட்டியில் இருந்தன. இருப்பினும், ஆகஸ்ட்டில் அதானி பவர் நிறுவனத்துக்குத், திட்டத்துக்கான உத்தேச கடிதம் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தப்படி, பீகாரின் பஹல்பூர் மாவட்டத்தில் 1,020 ஏக்கர் நிலம் அதானி பவர் நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. அதுவும், ஆண்டுக்கு, ஏக்கருக்கு ஒரு ரூபாய் என்ற வீதத்தில் குத்தகைக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மாம்பழம், லிச்சி பழங்கள் விளையக்கூடிய பழத்தோட்டங்கள் இந்த நிலப்பரப்பில் உள்ளன. அவற்றுக்கு உரிய இழப்பீடுகூட வழங்கப்படவில்லை என விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர். ஆனால், அதானிக்கு மிகச்சொற்ப கட்டணத்துக்கு நிலம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. அதானிக்கு ஒரு அளவுகோல், அடித்தட்டு மக்களுக்கு ஒரு அளவுகோல்!

## ஃப்ளாஷ்பேக்



### தலைவர் முன் ஐம்பெரும் முழக்க உரை!



பா.ஜாகிர் உசேன்

2013-ஆம் ஆண்டு, அன்றைய கழக இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் முன்னிலையில், ஈரோடு மாவட்டம், காஞ்சிகோயிலில் இளைஞர் அணி பயிற்சிப் பாசறைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் ஈரோடு மாநகரம் கொல்லம்பாளையம் பகுதி இளைஞர் அணி அமைப்பாளராக இருந்த நான், கழகத்தின் ஐம்பெரும் முழக்கம் குறித்து உரையாற்றினேன். கழகத்தலைவர், அமைச்சர்கள் முத்துசாமி, கோவி.செழியன், பேராசிரியர் சுப.வீரபாண்டியன், முன்னாள் அமைச்சர்கள் என்.கே.கே. பெரியசாமி, என்.கே.கே.பி. ராஜா, சுப்புலட்சுமி ஜெகதீசன் ஆகியோர் முன்பாகப் பேசியது மறக்க முடியாத நிகழ்வு.

– பா.ஜாகிர் உசேன், மாநகர துணை அமைப்பாளர், ஈரோடு மாநகரம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### மன்னை நாராயணசாமி கைது!

1963-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் மதுரையில் நடைபெற்ற சட்ட எரிப்புப் போருக்கு, அறப்போர் வீரர்கள் அணிவகுத்துச் செல்ல, கலைஞர், என்.வி.என்., மன்னை நாராயணசாமி ஆகியோர் நடந்து பின்தொடர்ந்தனர். அப்போது, போலீசார் மன்னை நாராயணசாமியை மட்டும் கைதுசெய்து, போலீஸ் வேனில் ஏற்றிச்சென்றனர். கலைஞரும் என்.வி.என். அவர்களும் சென்னை வந்தபின்னர், 19.12.1963 அன்று வீட்டிலிருந்து கைது செய்யப்பட்டு, மதுரை கொண்டுசெல்லப்பட்டனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131